

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 6

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: அப்துல்லாஹ் மற்றும் ஆமினா ஆகியோருக்கு பிறந்த நபி (ஸல்) அவர்கள்
- பகுதி 2: ஹலிமா அஸ்ஸாதியாவுடனான நபி (ஸல்) அவர்களின் குழந்தைப் பருவம்
- பகுதி 3: நபி (ஸல்) அவர்களின் மார்பு திறக்கப்பட்டது
- பகுதி 4: ஆமினா மற்றும் அப்துல் முத்தலிபின் மரணம்
- பகுதி 5: நபி (ஸல்) அவர்களின் ஆரம்பகால வாழ்க்கை - முதல் தொழில் மற்றும் ஃபிஜார் போர்கள்
- பகுதி 6: அல்ஃபுதுல் ஒப்பந்தம்

## பகுதி 1: அப்துல்லாஹ் மற்றும் ஆமினா ஆகியோருக்கு பிறந்த நபி (ஸல்) அவர்கள்

- அப்துல் முத்தலிபின் குழந்தைகளில் அப்துல்லா மிகவும் புத்திசாலியாக இருந்தார். எல்லோரும் அவரை மிகவும் நேசித்தார்கள்.

- அப்துல்லா, பனு ஸஹ்றா கோத்திர தலைவரின் மகளான ஆமினாவை மணந்தார். ஆமினா அம்மையார் உயர்ந்த பரம்பரையில் இருந்து வந்தவர்.

- வியாபார பயண காலம் தொடங்கும் நேரத்தில் இவர்கள் திருமணம் நடந்தது.

- அப்துல்லா தனது மனைவியுடன் ஐந்து, ஆறு நாட்கள் மட்டுமே இருந்தார். பின்னர், வணிகத்திற்காக அவர் பயணம் மேற்கொள்ள நேர்ந்தது.



- அவர் சிரியாவுக்குச் சென்று திரும்பும் வழியில் மிகவும் நோய்வாய்ப்பட்டார். பயண வாகனம் மதீனாவில் நின்றபோது, தனது நோய் குணமாக வேண்டி, அப்துல்லா தனது உறவினர்கள் சிலருடன் அங்கேயே தங்கிவிட்டார்.

- இதற்கிடையில், ஆமினா அம்மையார் தான் கர்ப்பமாக இருக்கும் நற்செய்தியை தனது கணவரிடம் தெரிவிக்க அவரது வருகைக்காக ஆவலுடன் காத்திருந்தார்.

- ஆனால், அப்துல்லா மதீனாவில் காலமானதாகவும், அவர் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டதாகவும் ஆமினா அம்மையாருக்கு செய்தி வந்தது.

- ஆமினா அம்மையார் ரபியுல் அவ்வல் மாதம் ஒரு திங்கட்கிழமையன்று ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்கள். அக்குழந்தைக்கு அவரது

பாட்டனார் அப்துல் முத்தலிப் ‘முஹம்மது’ என்று பெயரிட்டார்; அதாவது ‘புகழ் பெற்றவர்’ என்று பொருள்.

- நபி (ஸல்) அவர்கள் ஒரு திங்கட்கிழமை பிறந்தார்கள் என்பதை ஸஹீஹ் முஸ்லிமில் உள்ள ஹதீஸ் மூலம் நாம் அறிவோம். நபி (ஸல்) அவர்கள் திங்கட்கிழமைகளில் ஏன் நோன்பு நோற்கிறார்கள் என்று கேட்டதற்கு, ‘‘நான் பிறந்த நாள் இதுவே, எனக்கு முதலில் வஹீ வந்த நாளும் இதுவே’’ என்று பதிலளித்தார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)

## பகுதி 2: ஹலிமா அஸ்ஸாதியாவுடனான நபி (ஸல்) அவர்களின் குழந்தைப் பருவம்

- குரைஷிகளின் உயர்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் புதிதாகப் பிறந்த குழந்தைகளை ஓரிரு வருடங்கள் மக்கள்தொகை குறைவாக உள்ள பாலைவனப் பகுதிகளுக்கு அனுப்புவது வழக்கமாக இருந்தது. அங்குள்ள செவிலித்தாய்கள் அக்குழந்தைகளைக் கவனித்துக் கொள்வார்கள்.

- மக்கா போன்ற பகுதிகளில் குழந்தை இறப்பு அதிகமாக இருந்த அந்தக் காலத்தில் தூய்மையான சூழலில், பாதுகாப்பாக குழந்தைகளை வளர்க்க இந்த நடைமுறை உதவியாக இருந்தது. மேலும், கலப்பற்ற, தூய்மையான அரபு மொழியினை அக்குழந்தைகள் கற்றுக்கொள்ளவும் இது உதவியது.

- பனுசாத் இப்னு பக்ர் கோத்திரத்தைச் சேர்ந்த பெண்கள் குழு, தாங்கள் தத்தெடுக்க விரும்பும் புதிதாகப் பிறந்த குழந்தைகளைத் தேடி மக்காவுக்கு வந்தனர். அவர்களில் ஹலிமா பின்த் ஸாதியாவும், அவரது கணவரும் இருந்தனர்.

- ஹலிமா அந்நேரத்தில் ஒரு மகனைப் பெற்றெடுத்து இருந்தார். அவருடைய மூத்த மகள் பெயர் ஷாயிமா.

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனாதையாக இருந்ததாலும், அவர்களைத் தத்தெடுத்தால் அதிக சம்பளம் கிடைக்காது என்பதாலும், யாரும் அவர்களைத் தேர்ந்தெடுக்க விரும்பவில்லை.

- இந்நிலையில் எல்லா செவிலித்தாய்களுக்கும் தத்துக் குழந்தை கிடைத்தது. ஆனால் ஹலிமாவுக்கு மட்டும் எந்த குழந்தையும் கிடைக்கவில்லை. எந்தக் குழந்தையையும் தத்தெடுக்காமல் திரும்பிச் செல்ல விரும்பாததால், ஹலிமா

தன் கணவனிடம் ஆலோசனை நடத்தினார்.

- ‘‘ஒருவேளை அல்லாஹ் இந்த அனாதை குழந்தையின் மூலம் நமக்கு அருள்புரிவான்’’ என்று கூறி, அவர் அந்தக் குழந்தையைத் தத்தெடுக்கும்படி தனது மனைவி ஹலிமாவை ஊக்கப்படுத்தினார்.

- முஹம்மது (ஸல்) அவர்களைத் தத்தெடுத்தவுடன், ஹலிமா மற்றும் அவரது குடும்பத்தினரின் நிலைமை மாறியது. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பரக்கத்தைக் கண்டார்கள். அவர்களின் வயதான ஒட்டகத்தின் மடியில் பால் நிரம்பி வழிந்ததால் அவர்கள் அனைவரும் வயிறார பருக முடிந்தது.

- ஹலிமாவின் கழுதை மிகவும் வயதானது; அதனால் அது மெதுவாகவே செல்லும். ஆனால், அது ஹலிமாவை நபி (ஸல்) அவர்களுடன் சுமந்து செல்லும் போதெல்லாம் அது மற்ற கழுதைகளைவிட முந்திச் சென்றது. ஹலிமா இந்த இரண்டு வருட காலத்தில் இதுபோன்ற பல அற்புதங்களை தொடர்ந்து பார்க்க நேர்ந்தது.



- தங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த ‘பரக்கத்’, தத்தெடுக்கப்பட்ட இந்த குழந்தையின் மூலம்தான் என்று அவர்கள் மிகவும் உறுதியாக நம்பினர். இதனால், ஹலிமா தான் வளர்த்துவரும் முஹம்மது தங்களிடம் தங்குவதை நீட்டிக்கக்கோரி ஆமினா அம்மையாரிடம் சென்று கெஞ்சினார். அதை ஆமினா அம்மையாரும் ஏற்றுக்கொண்டார்.

## பகுதி 3: நபி (ஸல்) அவர்களின் மார்பு திறக்கப்பட்டது

- நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நான்கு வயதாக இருக்கும் போது வானவர் ஜிப்ரீல் (அலை), நபி (ஸல்) அவர்களிடம் வந்ததாகவும், அதைப்பார்த்த

விளையாடிக் கொண்டிருந்த மற்ற குழந்தைகள் ஓடிவிட்டனர் என்றும் ஆனால் குழந்தை முஹம்மது (ஸல்) அவர்கள் அங்கேயே நின்றதாகவும் ஸஹீஹ் முஸ்லிமில் கூறப்பட்டுள்ளது.

- ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் மார்பைத் திறந்து, இதயத்தை வெளியே எடுத்து, அதில் இருந்த ஒரு கறுப்பு கழிவை அகற்றினார்கள்.

- அப்போது ஜிப்ரீல் (அலை), ''இது உன்னில் உள்ள ஷைத்தானின் பங்கு'' என்று கூறினார்கள். (குழந்தை பிறக்கும்போது ஒவ்வொரு குழந்தையின் இதயத்தையும் ஷைத்தான் குத்துகிறான் என்று ஸஹீஹ் புகாரீயில் பதிவாகியுள்ளது. இதனால்தான் குழந்தைகள் பிறந்தவுடன் அழுகிறார்கள்).

- ஜிப்ரீல் (அலை) நபியவர்களின் இதயத்தை ஒரு தங்கக் கோப்பையில் இருந்த ஜம்ஜம் தண்ணீரில் கழுவி, அதைத் திரும்ப வைத்து, அவர்களுடைய மார்பை மூடினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்).

- பல வருடங்கள் கழித்து, அனஸ் இப்னு மாலிக் (ரலி) குறிப்பிட்டார்கள்: ''நான் நபி (ஸல்) அவர்களது மார்பில் நூல் மூலம் ஆன தையல் குறியைக் கண்டேன்'' (ஸஹீஹ் முஸ்லிம்).

- இந்த சம்பவம் ஹலிமாவை கவலையடையச் செய்தது. வேறு எந்த அசம்பாவிதமும் நடக்கும் முன், நபி (ஸல்) அவர்களை அவர்களுடைய தாயிடம் ஒப்படைக்க முடிவு செய்தார்.

- நபியவர்கள் பூரண குணம் கொண்டவர்களாக இருக்கவேண்டும் என்பது அல்லாஹ்வின் விருப்பமாக இருந்தது. இந்த நிகழ்வு நபி (ஸல்) அவர்களை முன்மாதிரியான நடத்தைக்கு அல்லாஹ் தயார்படுத்தியதாகக் கருதலாம்.

## பகுதி 4: ஆமினா மற்றும் அப்துல் முத்தலிபின் மரணம்

- ஹலிமாவிடமிருந்து குழந்தையைப் பெற்றுக்கொண்ட பிறகு, ஆமினா அம்மையார் இளம் வயது நபி (ஸல்) அவர்களை யத்ரிப்பிற்கு (மதீனா) தனது உறவினர்களைச் சந்திக்க அழைத்துச் செல்ல முடிவு செய்தார்.

- அவர்கள் யத்ரிப்பில் (மதீனா) சில மாதங்கள் தங்கியிருந்து, பின்னர் மக்காவுக்குத் திரும்பும் வழியில், ஆமினா அம்மையார் நோய்வாய்ப்பட்டு, வழியில் உள்ள அல்-அப்வா என்ற ஊரில் காலமானார்கள்.

- முஹம்மது (ஸல்) அவருடைய பெற்றோர்கள் இருவரும் இறந்துவிட்டதால், அவர்களது பாட்டனார் அப்துல் முத்தலிப்பிடம் வளர்ந்து வந்தார்கள். அப்போது அவர்களுக்கு ஆறு அல்லது ஏழு வயது இருக்கும்.

- அப்துல் முத்தலிப் மக்காவின் தலைவராக இருந்தார். மேலும் அவரது எல்லா பேரக்குழந்தைகளிலும் நபி (ஸல்) அவர்களை மிகவும் நேசித்தார்.

- அப்துல் முத்தலிப் கஃபாவின் அருகே ஒரு உயர்ந்த மேடையில் அமர்ந்து குரைஷிகளின் விவகாரங்களைப் பற்றி விவாதிப்பார். அந்த மேடையில் தம்முடன் நபி (ஸல்) அவர்கள் மட்டுமே அமர அனுமதித்தார்.

- தமது எட்டாவது வயதில், நபி (ஸல்) அவர்களின் பாட்டனாரும், மக்காவின் தலைவருமான அப்துல் முத்தலிப் காலமானபோது, மூன்றாவது முறையாக நபி (ஸல்) அவர்கள் அனாதையானார்கள்.

- பின்னர், நபி (ஸல்) அவர்கள் தனது தந்தையின் சகோதரர் அபு தாலிபிடம் வளர்ந்து வந்தார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் ஒரு அனாதை; அனாதைகளைப் பராமரிப்பது பற்றி பல ஹதீஸ்கள் உள்ளன.



- ‘‘நானும், அனாதையைப் பராமரிப்பவரும் சுவனத்தில் இப்படித்தான் இருப்போம்’’ என்று நபி (ஸல்) அவர்கள் தன் இரு விரல்களையும் சேர்த்துக் காட்டி கூறினார்கள். – (ஸஹீஹ் முஸ்லிம்)

## பகுதி 5: நபி (ஸல்) அவர்களின் ஆரம்பகால வாழ்க்கை – முதல் தொழில் மற்றும் ஃபிஜார் போர்கள்

- நபி (ஸல்) அவர்கள் பார்த்த முதல் தொழில் (வேலை), ஆட்டு மந்தையை மேய்த்து, பராமரிப்பதாகும். அதன் மூலம் சிறிது பணம் சம்பாதித்தார்கள்.

- நபி (ஸல்) அவர்களின் ஆரம்பகால வாழ்க்கைக்கும், அவர்களுடைய நபித்துவத்திற்கு முன்பும் இடையே இருந்த காலத்தில் சில குறிப்பிடத்தக்க சம்பவங்கள் நிகழ்ந்தன.

- நபி (ஸல்) அவர்களுக்கு 15 வயது இருக்கும் போது, குரைஷி குலத்தின் கினானா கோத்திரக்காரர்களுக்கும், ஹவாஜின் பழங்குடியினருக்கும் இடையே ஃபிஜார் போர்கள் என்று அழைக்கப்படும் பெரும் சண்டை ஏற்பட்டது.

- கினானாவைச் சேர்ந்த ஒரு மனிதர் ஹவாசின் பழங்குடியினரைச் சேர்ந்த ஒருவரைக் கொன்றுவிட்டார். இதனால், ஹவாசின் மக்கள் கினானா பழங்குடியினரைத் தாக்கினர்.

- கினானா மக்களும், மற்ற குரைஷிகளும் பாதுகாப்புக்காக ஹராமுக்குள் விரைந்தனர்.

- கோபத்தின் மிகுதியால் ஹவாஜின் பழங்குடியினர் ஹராமுக்குள் நுழைந்து, கினானா மக்களைத் தாக்கினர்.

- ஒரு மனிதனைக் கொல்வதே தவறு; மேலும் ஹராமுக்குள் இருக்கும் மக்களைத் தாக்குவது மிகப் பெரிய குற்றமாகும். எனவே, ஆரம்பத் தவறு குரைஷிகளிடமிருந்த போதிலும், ஹராமின் புனிதம் ஹவாஜின் மக்களால் உடைக்கப்பட்டதால், குரைஷிகளால் ஒரு முழுமையான போர் அறிவிக்கப்பட்டது.

- ஆரம்பத்தில் ஹவாஜின்கள் வெற்றி பெற்றாலும், முடிவில் குரைஷிகள் வென்றனர். இறுதியாக ஒரு சமாதான உடன்படிக்கை இயற்றப்பட்டு, சண்டை

நிறுத்தப்பட்டது. குரைஷிகள் இழப்பீட்டு பணம் செலுத்தினர்.

- நபி (ஸல்) அவர்கள் பின்னாட்களில் இப்போரைப் பற்றி கூறும்போது, தனது உறவினர்களுக்கு அம்புகளை எடுத்து கொடுத்து உதவியதை நினைவு கூர்ந்தார்கள். மேலும் அவர்கள், ''போர்களில் பங்கேற்றதற்காக நான் வருத்தப்படவில்லை'' என்றார்கள்.

## பகுதி 6: அல்ஃபுதுல் ஒப்பந்தம்

- நபி (ஸல்) அவர்களின் ஆரம்பகால வாழ்க்கையில் நடந்த மற்றொரு சம்பவம் 'அல்ஃபுதுல்' ஒப்பந்தம் ஆகும். அப்போது அவர்களுக்கு 20 வயது இருக்கும்.

- யமனைச் சேர்ந்த ஒருவர் ஹஜ்ஜுக்காக மக்காவுக்கு வந்திருந்தார். அப்போது அவர் தனது பொருட்களை 'அல்அஸ் இப்னு அல்வைல்' என்ற குரைஷி தொழிலதிபர் மற்றும் அரசியல்வாதிக்கு விற்பனை செய்திருந்தார்.

- அல்அஸ் அதற்குரிய பணம் செலுத்துவதைத் தவிர்த்து, அவருக்கு கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார்.

- இதனால் யமனைச் சேர்ந்த அந்த மனிதர் குரைஷி மக்களிடம் முறையிட்டு தனது பணத்தைத் திரும்பப் பெற உதவி கோரினார். ஆனால் அல்அஸ் குரைஷ் இனத்தைச் சேர்ந்தவர்; மேலும் செல்வந்தராகவும், செல்வாக்கு மிக்கவராகவும் இருந்ததால் மக்களில் யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை.

- தனது கடைசி முயற்சியாக, அந்த மனிதர் இது பற்றி கவிதைகளை எழுதி கஃபாவின் முன் அதை சத்தமாக படிக்கத் தொடங்கினார்.

- அதில் குரைஷி மக்களால் தமக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும், ஹஜ்ஜுக்கு வந்த அவரை ஏமாற்றிவிட்டார்கள் என்றும், குரைஷிகள் புனித கஃபாவின் பாதுகாவலர்களாகக் கருதப்பட்டாலும் அவர்கள் திருடர்களைப் போல் செயல்படுகிறார்கள் என்றும் கூறியிருந்தார்.

- இந்தச் செய்தி காட்டுத் தீ போல் பரவியது. குரைஷிகளின் மதிப்பில் களங்கம் ஏற்பட்டது. இதனால் நபி (ஸல்) அவர்களின் பெரிய தந்தை அல்-ஜுபைர் இப்னு அப்துல் முத்தலிப் அவர்கள் இதற்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்.



- அவர் குரைஷிகளின் மூத்த உறுப்பினர்கள் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டினார். அதில் அவர்கள் ஓர் உடன்படிக்கைக்கு ஒப்புக்கொண்டனர். அதாவது அடக்குமுறை செய்பவர் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர்கள் அடக்குமுறை செய்பவருக்கு எதிராக ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் இருக்கவேண்டும் என முடிவு செய்தனர்.

- ஒடுக்கப்பட்டவர் வெளியூரைச் சேர்ந்தவராக இருந்தாலும், அடக்குமுறை செய்பவர் குரைஷி இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், தாங்கள் ஒடுக்கப்பட்டவரின் பக்கமே நிற்போம் என்று அறிவித்தார்கள்.

- அவர்கள் கஃபாவின் முன் சென்று இதைப் பகிரங்கமாக அறிவித்தார்கள். மேலும் தங்கள் கைகளை வாசனைத் திரவியத்தில் நனைத்து, கஃபாவின் மீது வைத்தார்கள். இது 'ஃபுதுல் ஒப்பந்தம்' என்று அழைக்கப்பட்டது. மேலும் அதில் பங்கேற்ற இளைஞர்களில் நபி (ஸல்) அவர்களும் ஒருவர்.

- அரேபிய மக்கள் இதற்கு முன்பு இதுபோன்ற ஒரு ஒப்பந்தத்தைப் பற்றி அறிந்ததில்லை. ஏனெனில், மற்றொரு சமூகத்தைச் சேர்ந்த ஒரு நபரின் உரிமைகளை விட தம்மக்களிடம் உள்ள உறவுகள் அவர்களுக்கு மிகவும் முக்கியமானதாக இருந்தது.

- நபி (ஸல்) அவர்கள் பின்னாளில் தான் 'ஃபுதுல் உடன்படிக்கைக்கு' சாட்சியாக இருந்ததாகவும், இஸ்லாத்தில் கூட அத்தகைய உடன்படிக்கையை நிலைநிறுத்துவதாகவும், இதுபோன்ற ஒப்பந்தத்தில் தான் பங்கேற்பதைத் தவறவிட மாட்டேன் என்றும் கூறினார்கள். (இப்னு ஹிஷாம் – அல் ஸிரா அல் நபவிய்யா)

- இந்த சம்பவங்கள் நபித்துவத்திற்கு முன் நிகழ்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் நபி (ஸல்) அவர்கள் நபித்துவத்திற்குப் பிறகும் அவற்றை அங்கீகரித்து உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

- முஸ்லிம் அல்லாத சமூகமாக இருந்தாலும், நபி (ஸல்) அவர்கள் சமூகத்துடன் எவ்வாறு ஈடுபாடுடன் இருந்தார்கள் என்பதை இந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. இவ்வாறாக அவர்கள் சமுதாய முன்னேற்றத்திற்கும், அநீதிக்கு எதிராகவும் வாழ்ந்து வந்தார்கள்.